புதுப்பாளையத்தில்

ரூ.1.91 கோடியில் திட்ட பணிகள் துவக்கம்

தேசிய ரூர்பன் இயக்க திட்டம்

அவிநாசி புதுப்பாளையத்தில் ரூ.1.91 கோடியில் மாட்டுத்தீவன உற்பத்தி ஆலையை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். அருகில், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், திட்ட இயக்குநர் (மகளிர்) வரலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

அவிநாசி, டிச.21: அவிநாசி புதுப்பாளையம் ஊராட்சி பகுதிகளில் ரூ.1.91 கோடி மதிப்பீட்டில், நிறைவடைந்த திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன் தலைமையில், நேற்று அவிநாசி ஊராட்சி ஒன்றியம் புதுப்பாளையம் ஊராட்சியில் ரூ.1.91கோடி மதிப்பீட்டில், தேசிய ரூபன் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டுள்ள மாட்டுத்தீவன உற்பத்தி ஆலை மற்றும் எண்ணெய் அரவை ஆலையை திறந்து வைத்தார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ், மாதம் ரூ.1,000 என்ற மகத்தான திட்டத்தை வழங்கியது வரை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு, அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை, மாதம் ரூ.1000 அவர்களது வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வரும் ‘புதுமைப் பெண்’ என்ற திட்டத்தை, துவக்கி வைத்தார்.

இதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுய உதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொலி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின், ‘காலை உணவுத்திட்டம்’, ‘புதுமைப்பெண் திட்டம்’, ‘வருமுன் காப்போம் திட்டம்,’ ‘இன்னுயிர்காப்போம்’ நம்மை காக்கும் 48, ‘மக்களைத்தேடி மருத்துவம்’ மற்றும் ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்’ உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோவை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டு பல்வேறு துறைகளின் மூலம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பெறப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

அவிநாசி புதுப்பாளையம் ஊராட்சி கவுண்டம்பாளையத்தில் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில், தேசிய ரூபன் திட்டத்தின் கீழ், கட்டப்பட்ட மாட்டுத்தீவன உற்பத்தி ஆலை மற்றும் ரூ.72.78 மதிப்பீட்டில், கட்டப்பட்ட எண்ணெய் அரவை ஆலை மொத்தம் ரூ.1.91கோடி மதிப்பீட்டில், முடிவுற்ற திட்டப்பணிகளை, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். தொடர்ந்து, மகளிர் திட்டத்தின் சார்பில் சமுதாய முதலீட்டு நிதியின் கீழ் 16 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.13.15 லட்சம் மதிப்பிட்டிலான கடனுதவி காசோலைகளை வழங்கி, மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) வரலட்சுமி, உதவி திட்ட அலுவலர் விஜயகுமார், அவிநாசி ஒன்றிய ஆணையாளர் ரமேஷ்குமார், மாவட்ட இளைஞரணி திமுக செயலாளர் தங்கராஜ், உதவிப்பொறியாளர் செந்தில்குமார், பூண்டி ஒன்றியதிமுக செயலாளர் எஸ்.ஆர்.பழனிசாமி, புதுப்பாளையம் ஊராட்சித்தலைவர் கஸ்தூரிபிரியா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அன்பழகன் பிறந்த நாள் விழா

பல்லடம் நகர திமுக சார்பில் அன்பழகன் பிறந்த நாளையொட்டி அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், நகர திமுக செயலாளர் ராஜேந்திரகுமார், நகர கழக நிர்வாகிகள் வேலுமணி, வசந்தாமணி தங்கவேல், குட்டி பழனிசாமி, மாவட்ட பிரதிநிதி கவுஸ்பாட்ஷா, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஜெகதீஷ், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி அமைப்பாளர் சேக்மத்தூம், மலைச்சாமி, லிங்கருசாமி, மயில்சாமி, சுமித்திரா, கவிதா ஜெயந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் பதிப்பு
வரி விளம்பரங்கள்
ஆட்டோமொபைல்
வாகனம் விற்பனை

வாகனம் விற்பனைக்கு

வண்டி எண்	மாடல்	வருடம்
TN67 BX-5452	HYUNDAI XCENT -P	2017

தொடர்புக்கு :
90424 19891
0421-2210859
0421-2211128

பொங்கலுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க கோரி

முதல்வருக்கு தபால் அனுப்பி போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கத்தினர் திருப்பூர் தலைமை தபால் நிலையத்தில் நேற்று தபால் அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர், டிச.21: தமிழ்நாடு அரசு கட்டுமான நலவாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு தைப் பொங்கல் பண்டிகைக்கு ரூ.5 ஆயிரம் வழங்க கோரி ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நேற்று முதலமைச்சருக்கு தபால் அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்திற்கு ஏ.ஐ.டி.யு.சி கட்டட சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் மூர்த்தி தலைமை வகித்தார். ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட பொதுச்செயலாளர் பிஆர் நடராஜன், ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட துணை தலைவர் கே.எம் இசாக், கட்டட சங்க மாவட்ட பொருளாளர் கணேஷ், மாவட்ட துணை செயலாளர் முருகேசன் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர்.

நமக்கு நாமே திட்டத்திற்கு நிதி

திருப்பூர் மாநகராட்சி 8வது வார்டு மும்மூர்த்தி நகர், லட்சுமி கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக ரூ.15.40 லட்சத்திற்கான வரைவோலையை, மாமன்ற உறுப்பினர் வேலம்மாள் காந்தி மற்றும் அப்பகுதி மக்கள் மாநகராட்சி மேயர் தினேஷ்குமாரிடம் நேற்று வழங்கினர்.

திருப்பூர் மாநகராட்சி 2வது வார்டு டீச்சர்ஸ் காலனி, சத்யா காலனி, நல்லப்பா நகர், திருவள்ளுவர் வீதி மற்றும் ஸ்ரீநகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் பாண்டியன் நகர் மயானத்தில் கம்பி வேலி, காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணிகளுக்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக ரூ.49.90 லட்சத்திற்கான வரைவோலையை மாமன்ற உறுப்பினர் மாலதி கேபிள் ராஜ் மற்றும் அப்பகுதி மக்கள் மாநகராட்சி மேயர் தினேஷ்குமாரிடம் நேற்று வழங்கினார்.

பெரிய கருணைபாளையத்தில்

தரமற்ற முறையில் அமைக்கப்படும் தார் சாலை

பொதுமக்கள் புகார்

அவிநாசி, டிச.21: அவிநாசி அருகே பெரிய கருணைபாளையத்தில் தரமற்ற முறையில் அமைக்கப்படும் சார் சாலையை பணியை முறைப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அவிநாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு மனு அளிக்க வந்த அப்பகுதி மக்கள் கூறியதாவது:

புதுப்பாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட பெரிய கருணைபாளையத்தில், சாலை பழுதடைந்து, பொதுமக்கள் தொடர்ந்து போராட்டத்திற்கு பிறகு சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. தற்போது பெரிய கருணைபாளையத்தில் இருந்து அவிநாசி மங்கலம் சாலை வரை புதிய தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இருப்பினும், இதில் பழைய தார் சாலையை தோண்டாமலேயே, தரமற்ற முறையில் அதன் மேலேயே புதிய சாலை அமைக்கப்படுவதால், சாலை மிக உயரமாக உள்ளது. அப்படியே அமைக்கப்பட்டால், சாலை மிக குறுகிய காலத்தில் மீண்டும் பழுதாகி விடும். ஆகவே, உடனடியாக சாலைப்பணியை முறைப்படுத்த வேண்டும். மேலும், இப்பகுதியில் பாரிமரிப்பின்றி உள்ள பொதுக்கழிப்பிடத்தை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர். மனுவை பெற்றுக் கொண்ட ஒன்றிய ஆணையர் ரமேஷ்குமார் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்

ஒன்றிய அரசை கண்டித்து அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவிநாசி, டிச.21: ஒன்றிய அரசை கண்டித்து விடுதலைச் சிறுத்தை கட்சியினர் அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலாளர் பழ.சண்முகம் தலைமை தாங்கினார். ஒன்றிய அமைப்பாளர் ரங்கசாமி, மகளிர் அணி விடுதலை இயக்க பொறுப்பாளர் துளசிமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொறுப்பாளர்கள் முருகன், திருமாரவி மற்றும் ஷாஜகான், செந்தில் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு, ஒன்றிய அரசை பதவி விலக வேண்டும் என்று முழக்கமிட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்தது ஜனநாயகத்துக்கு விரோதமான நடவடிக்கையாகும். எனவே, இந்த ஒன்றிய அரசின் சர்வாதிகார போக்கை கண்டித்து, விடுதலைச் சிறுத்தை கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில், 40 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்– இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வேராவல்,
குஜராத்–362266 கிளை அலுவலகம்– 2 ஆவது தளம், கட்டிட எண்.739,
நிஸ்ஸான் ஷோ ரூமின் மேல்தளம், அவினாசி சாலை, கோயம்புத்தூர்–641018

பிற்சேர்க்கை IV [கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(1) காணவும்]
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் **ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு ஒன்று வழங்கி கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார்.
கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார்.
கடன்தாரர்களுக்குக் குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் மற்றும் அதற்கான வட்டி ஆகிய தொகைக்காக **ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** வசூலுக்கு உட்படும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு 8 விதிமுறைகள் கடன்தாரர்கள் கவனத்திற்கு கொண்டுவரப் படுகின்றன.

1.கடன்தாரர் பெயர்: முகேஷ்கண்ணன் M, மணிகண்டன் P, முகேஷ்கண்ணன் M
நிலுவைத் தொகை: ரூ.15,37,397/–(ரூபாய் பதினைந்து இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)
கோரிக்கை அறிவிப்பு தேதி: 05–10–2023 **சுவாதீன தேதி: 18.12.2023**

அசையாச் சொத்தின் விவரம்
கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், சூலூர் வட்டம், கள்ளப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள, S.F. எண் 174/1c ஏக்கர் 0.11, S.F. எண் 174/4b ஏக்கர் 6.00, S.F. எண் 174/5b ஏக்கர் 2.77 மொத்தத்தில் ஏக்கர் 8.88 நிலம் அனுமதி Ma.Va./Ko.Vu.Thi.Ku எண் 9/2020 கீழ் உறுப்பினர் செயலாளர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டமிடல் ஆணையம் மற்றும் 17.02.2020 தேதியிட்ட சூலூர் வட்டாட்சியர் அனுமதி Tr. No.2020/12/10/000043sd இன்படி 01/2019–20 இல் செயல் அலுவலர் கள்ளப்பாளையம் கிராம ஊராட்சி அவர்கள் மூலம் அனுமதி பெற்ற “ஸ்ரீ சபரி கார்டன்” பெயரில் மனைப்பிரிவாக மேம்படுத்தப்பட்டது S.F. எண்கள் 174/1c3, 174/4b1, 174/4b3, 174/4b6, 174/4b7, 174/4b8, 174/4b9. 174/4b10, 174/4b12, 174/4b13, 174/5b1 மற்றும் 174/5b3, 174/5b4, 174/5b5, 174/5b6 நடப்பு சார் பிரிவு S.F. எண் 174/5b4 இல் மனை எண். 45, இல் அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. மேலும் பின்வரும் எல்லைகள் மற்றும் பரப்பளவுகளுக்குள்: **கிழக்கு:** மனை எண் 44, **மேற்கு:** மனை எண் 46, **வடக்கு:** S.F. எண் 174/5a நிலம், **தெற்கு:** 7.2 மீட்டர் அகலம் கிழக்கு– மேற்கு மனைப்பிரிவு. **இதன் நடுவில் கிழக்கு–மேற்காக வடக்குப் பக்கம்: 18 அடி. கிழக்கு–மேற்காக தெற்குப் பக்கம்: 18 அடி. தெற்கு–வடக்காக கிழக்குப் பக்கம்: 35 அடி. தெற்கு–வடக்காக மேற்குப் பக்கம்: 35 அடி.**
பரப்பளவு 630 ச.அடி அல்லது 58.53 ச.மீ. அல்லது 1 செண்ட்கள் மற்றும் 194 ச.அடி பரப்பளவு காலி நிலம் ஆனது சாலைகள் மற்றும் பொதுப் பாதை ஏனையவற்றை பயன்படுத்தும் உரிமைகளுடன். இந்த சொத்து நடப்பு சார் பிரிவு S.F. எண் 174/5b1a இல் அடங்கியது.

2. கடன்தாரர் பெயர்: உலகநாயகி V, உலகநாயகி V
நிலுவைத் தொகை: ரூ.11,46,407/– (ரூபாய் பதினொன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்று ஏழு மட்டும்.)
கோரிக்கை அறிவிப்பு தேதி: 05–10–2023 **சுவாதீன நாள்: 19–12–2023**

அசையாச் சொத்து விவரம்
Doc Sf எண். 78/13 அளவீட்டின்படி 162.02 சதுர மீட்டர் மேலும் பழைய Sf எண்.36, பகுதி, பட்டா Sf எண்.78/13A1 படி உள்ள கதவு எண்.14/A, தோப்புத்தோட்டம், வடுகபாளையம் கிராமப் பஞ்சாயத்து, ஊத்துக்குளி ரயில்நிலையம் அருகில், ஈரோடு, தமிழ்நாடு–638752– இல் உள்ள 162.02 சதுர மீட்டர் பரப்பளவு உல்ள நிலமும் அனைத்து துண்டு மற்றும் முழுமைப் பகுதிகளும் அடங்கிய நிலம். **எல்லைகள்: கிழக்கில்:** 25 அடி அகலமுள்ள தெற்கில்– வடக்கு வாகனச் சாலை, **மேற்கில்:** திரு.ரமேஷ் மற்றும் சுரேஷுக்குச் சொந்தமான 162.02 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள சொத்து, **வடக்கில்:** சுப்பிரமணியத்தின் சொத்து, **தெற்கில்:** அலமேலுவின் நிலத்துடன் கூடிய Rcc கட்டிடம்.

தேதி: 21.12.2023 **அதிகாரப்பூர்வ அதிகாரி**
இடம்: கோயம்புத்தூர் **ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

பைக் மீது கார் மோதி பனியன் நிறுவன ஊழியர் பலி

அவிநாசி, டிச.21: பெருமாநல்லூர் அருகே பைக் மீது கார் மோதியதில் பனியன் நிறுவன ஊழியர் பலியானார்.

அவிநாசி அருகே சேவூர் தேவேந்திர நகரை சேர்ந்த அங்கப்பன் மகன் ரவிக்குமார் (45). பனியன் நிறுவன ஊழியர். இவர், புதிய திருப்பூரில் இருந்து பெருமாநல்லூர் நோக்கி பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது, கோவையில் இருந்து சேலம் நோக்கி அதிவேகமாக வந்த கார், பைக் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் பலத்த காயம் அடைந்த ரவிக்குமார், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து இவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது குறித்து பெருமாநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

விடுதலை சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்

உடுமலை, டிச. 21: எம்பிக்கள் இடைநீக்கம் கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் தலைமையில் உடுமலை ரயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர், ஈரோடு மண்டல துணைச் செயலாளர் ஜல்லிப்பட்டி முருகன், உடுமலை நகர பொறுப்பாளர் பொன். சக்திவேல், நகரச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் தம்பி மகாலிங்கம், குடிமங்கலம் ஒன்றிய செயலாளர் முத்துசாமி, மடத்துக்குளம் ராஜசேகர் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

சக்தி அறக்கட்டளை 2ம் ஆண்டு விழா

பல்லடம் அருகே 63 வேலம்பாளையத்தில் சக்தி அறக்கட்டளை 2ம் ஆண்டு விழாவில் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு பாடுபடும் பெண்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்பட்டது.

பல்லடம், டிச.21: பல்லடம் அருகே 63 வேலம்பாளையத்தில் சக்தி அறக்கட்டளை 2ம் ஆண்டு விழா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சக்தி அறக்கட்டளை நிறுவனர் மிருதுளா நடராஜன் தலைமை வகித்தார். திருப்பூர் மாவட்ட கல்குவாரி கிரசர் உரிமையாளர்கள் சங்க தலைவர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். அறக்கட்டளை செயலாளர் கௌசல்யாதேவி வேலுசாமி வரவேற்றார். விழாவில் உயிர் காக்கும் முதலுதவி பற்றி மருத்துவர்கள் பாலமுரளி, நளினி ஆகியோர் பேசினார்கள்.

பழங்குடியோர் முன்னேற்றத்திற்காக உழைக்கும் காடர் இனத் தலைவி ராஜலட்சுமி, இரவலர் இன தலைவி அமுதவல்லி, இருளர் இன தலைவர் வள்ளி, பலையர் சமூக எழுத்தாளர் முருகேஸ்வரி, பள்ளி தலைமை ஆசிரியர்கள் தளிஞ்சி ஆனந்தி, கோடந்தூர் ரோஸ்லின் செல்வபாய் ஆகியோருக்கு பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கரைப்புதூர் ஏ.நடராஜன், வனம் இந்தியா அறக்கட்டளை செயலாளர் ஸ்கை சுந்தரராஜ், எழுத்தாளர் ஷாலின் மரிய லாரன்ஸ் ஆகியோர் விருதுகளை வழங்கி பேசினார்கள்,

இவ்விழாவில் எழுத்தாளர் ஷாலின் மரிய லாரன்ஸ் பேசியதாவது:

பெண்களின் வளர்ச்சிக்கு பாடுபடுபவர்கள் மிக குறைவு. பெண்களுக்கு எந்த சமூகத்திலும் பொறுப்புகள் பதவிகள் வழங்கப்படுவதில்லை. அறவழியில் போராடி தான் பெண்கள் இவற்றை பெற வேண்டியது உள்ளது.

பெண்களின் மேம்பாட்டிற்காக போராடி வரும் ஆர்வலர்களை வரவேற்கிறோம். பெண்களுக்காக பெண்களே அறவழியில் போராடியும் வருகின்றனர். ஜாதி, கட்சி வேறுபாடு இன்று பெண்களின் முன்னேற்றத்திற்காக அனைவரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில், பல்லடம் நகராட்சி தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், பல்லடம் ஒன்றிய குழு தலைவர் தேன்மொழி, 63 வேலம்பாளையம் ஊராட்சி தலைவர் நடராஜன், மங்கலம் ஊராட்சி முன்னாள் தலைவர் முத்துராமலிங்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் ஈஸ்வரன், மன்னார்குடி புவனேஸ்வரி உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் துணை செயலாளர் வினிதா அசோக்குமார் நன்றி கூறினார். இவ்விழாவில் சைலம் நாட்டியாலயா மாணவியரின் பரத நாட்டியம், பறையிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ICICI Home Finance
கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா
கிளை அலுவலகம்: கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018
கிளை அலுவலகம்: முதல்தளம், கதவு எண்.66, ஜி.ஜி.டவர்ஸ், குமரன் சாலை, டவுன்ஹால் எதிரில், திருப்பூர்–641601
[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.
இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி “உள்ளது உள்ளவிடத்தில்”, “உள்ளது உள்ளவாறு”, மேலும் “உள்ளது எதுவோ அது” அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	காமராஜ் M (கடன்தாரர்), இராஜசெல்வி K (உப–கடன்தாரர்), கடன் கணக்கு எண். NHCBT00001278505	மனை எண் 19, Sf எண் 152 153/2 154/2B, கதவு எண். 19/1 இராணி கார்டன், ஒண்டிப்புதூர், சிவில் விமான நிலையம், சிங்காநல்லூர் கிராமம், கோயம்புத்தூர்– 641001.	ரூ. 1,40,64,478/– டிசம்பர் 15, 2023	Rs.1,49, 66,210/- Rs. 14,96,630/	ஜனவரி 15, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜனவரி 25, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி
2.	P உமாமகேஸ்வரி (கடன்தாரர்) K பழனிசாமி (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCBT00001354095 & LHCBT00001354097	Sf எண்.162/1, மனை எண்.6, கதவு எண். 33, பூபதி நகர், சரவணம்பட்டி கிராமம், காந்திபுரம் சார்பதிவு அலுவலகம், கோயம்புத்தூர்–641035.	ரூ. 67,00,275/– டிசம்பர் 15, 2023	Rs. 67,28,313/ Rs. 6,72,840/-	ஜனவரி 15, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜனவரி 25, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி
3.	கவிதா G (கடன்தாரர்) கணேஷ் கண்ணா (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண். NHTIR00000918715	கதவு எண்.1084 ஏ, Sf எண். 481/1, ஜனசக்தி நகர், சென்னியப்ப கவுண்டர் காலனி தொலைவில், தாராபுரம், கே.செட்டிபாளையம், வீரபாண்டி கிராமம், திருப்பூர்– 641601.	ரூ. 34,16,405/– டிசம்பர் 15, 2023	Rs. 58,66,875/ Rs. 5,86,690/-	ஜனவரி 15, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜனவரி 25, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி
4.	சைமன் S (கடன்தாரர்) லதா சைமன் (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண். NHTIR00001275783	S.F.No.499, சம்மந்திபுரம், வெள்ளாம்பாளையம் கிராமம், திருப்பூர் இணை 2 சார் பதிவு அலுவலகம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் –641652.	ரூ. 27,20,541/– டிசம்பர் 15, 2023	Rs. 41,78,300/ Rs. 4,17,830/-	ஜனவரி 15, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜனவரி 25, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக் இணையதளத்தில் (URL Link– https://BestAuctionDeal.com)** நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு/ அறிவிப்பு மூலம் **ஜனவரி 24, 2024, மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.
எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018** என்ற இடத்தில் **ஜனவரி 24, 2024, மாலை 04.00 மணிக்குள்ளாகவோ** அல்லது அதற்கு முன்போ முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதி மற்றும் நிபந்தனைகள் வரையறைகள் படிவம் ஆகியவற்றை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018** இடத்தில் **ஜனவரி 24, 2024, மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **கோயம்புத்தூர், திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் “ICICI Home Finance Company Ltd.– Auction” என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.
சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து கூடுதல் விவரங்களுக்கு, **9920807300** எண்ணில் **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தையோ அல்லது எங்கள் **விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதாரர் நெக்ஸ்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களையோ தொடர்பு கொள்ளவும்.
அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.
விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : டிசம்பர் 21, 2023 **அதிகாரப்பூர்வ அதிகாரி**
இடம் : கோயம்புத்தூர், திருப்பூர் **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**